# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,718 — 1966 ඔක්තෝබර් 20 වැනි බ්‍රහස්පතින්ද — 1966.10.20

14,718 ம இலக்கம்—1966 ம ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ந திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 289 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 290 | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 294 | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. | 297 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 298 | தாணுசித அறிவித்தல்கள் .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

ச. வ. பீ. 10/38

### நகரசபைகள் கட்டளைச் சட்டமும் உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டமும்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ம், 6 ம், 14 ம் பிரிவுகளாலும், (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ம் பிரிவினாலும் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், இக்கட்டளை வாயிலாக கேகாலைப் பட்டினம் சம்பந்தமாக 1966, செத்தெம்பர் 8 ன் 14,711/10 ம் இலக்க அதிவிசேட கெசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதற்குள்ள அவ்வட்டவணையின் கண்,

(அ) 3 ம் இலக்க வட்டாரமான ஒல்கமவின் வட்டார விவரணத்தில் "மிரிஹெல்ல தெரு" என்ற பதங்களுக்குப் பதிலாக "மிரி-ஹெல்ல அடிப்பாதை" என்ற பதங்களைச் சேர்த்தல் மூலமும் ;

(ஆ) 4 ம் இலக்க வட்டாரமான கேகாலையின் வட்டார விவரணத்தில்,

"வடக்கு : 3 ம் இலக்க வட்டாரத்தின் வட எல்லையின் கிழக்கு அந்தத்திலிருந்து, கிழக்கு முகமாக, நகர சபைப் பிரதேசத்தின் வடக்கெல்லை மார்க்கமாக பலகம திருப்பத் தெருவின் மத்திய கோட்டைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்படும் ஒரு கோடு.

கிழக்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட புள்ளியிலிருந்து, பலகம திருப்பத் தெருவின் மத்திய கோடு மார்க்கமாக கொழும்பு-கண்டி பகிரங்க வேலைத் திணைக்களத் தெருவின் மத்திய கோட்டைச் சந்திக்கும்வரை வரையப் படும் ஒரு கோடு, என்பதற்குப் பதிலாகப் பின்வருவன வற்றைச் சேர்த்தல் மூல்மும், அதாவது

"வடக்கு : 3 ம் வட்டாரத்தின் வட எல்லையினது கிழக்குக் கோட்டிலிருந்து, கிழக்கு நோக்கி நகர சபை எல்லைகளின் ஓரமாக மிரிஹெல்லை கேகாலை ஆகிய கிராமங்களுக்கு இடையிலான பொது எல்லைக்கும் அங்கிருந்து வடக்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் சொல்லப்பட்ட பொது எல்லை ஓரமாக அது தென்கிழக்கு நோக்கித் திரும்பும் இடமான பாறை எல்லையைக் குறிக்கும்வரை வரையப் பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தென் கிழக்கு நோக்கியும் தென்மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும், தென்மேற்கு நோக்கியும் பி. பி. 3609 இன் 14 ம் கண்டத்தின் கிழக்கு எல்லை ஓரமாக வட சுற்றுவட்ட வீதியின் மத்திய கோட்டுக்கும், அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட மத்திய கோட்டின் ஓரமாக அது பகலகமதிருப்பத் தெருவின் மத்திய கோட்டுடன் சந்திக்கும் இடத்தின் மத்திக்கும் அங்கிருந்து சொல்லப்பட்ட பகலகம திருப்பத் தெருவின் மத்திய கோட்டின் ஓரமாக அது கொழும்பு-கண்டி பகிரங்க வேலைத் திணைக்கள வீதியின் மத்திய கோட்டைச் சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்." என்பதனை இடுவதன் மூலமும் திருத்துகிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ம் ஆடு ஒக்ரோபர் மீ 12 ந உ.

10/712-1—20.10.1966 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிபபிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆடு ஜூலை மீ 15 ந் உ.

பேர்னட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

LD—B 69/41
GJ 1/2/13

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாய மான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூ ராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான் கேகாலை மாவட்டத்திலுள்ள தெரனியகலைக் கிராமப் பிரதேசத்தின் கிராம சபைக்கு அப்பிரிவிற்கிணங்க அதன் கிராமப் பிரதேசத்தில் ஒரு நிலவரியை விதித்து அறவிடுதற்கு இவ்வறிவித்தல்வாயிலாக அதிகார மளிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 26.9.1966.

10–729—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

### உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டம் 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கம்

இதில் உள்ள அட்டவணையிலுள்ள பதவி, 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச்சட்டத்தின் 43 (ஆ) பிரிவின் கீழ், 1949 ம் ஆண்டின் 8 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவை (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு, உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபையினால், இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவி என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

டபிள்யூ. ஏ. விஜேசிங்ஹ,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530, கொழும்பு 1,
7.10.1966.

அட்டவணை

மாநகரசபைகள்

பிரதான வைத்தியசாலை வைத்திய மருத்துவ உத்தியோகத்தர்.

10–722—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

### உள்ளூராட்சி (நிர்வாகப் பிரதேசங்கள்) கட்டளைச் சட்டம்

### 265 ம் அத்தியாயம்

வட பிரதேசம், கீழ், வவுனியா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. நல்லைநாதன், தமது சொந்தக் கடமைகளுடன், 1966, ஒக்தோபர் 4 ந் திகதி தொடக்கமாக கிழக்குப் பிரதேசம், மேல், திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பதில் கடமை பார்ப்பதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிறார் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

டபிள்யூ. ஜே. பர்ணந்து,
உள்ளூராட்சி ஆணையாளரும், உள்ளூராட்சி
அமைச்சின் உயர்தர உதவிச் செயலாளரும்.

கொழும்பு 1,
1966, ஒக்தோபர் 7 ந் திகதி.

10–736—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

#### 17 (5) ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின (அத்தியாயம் 257) 17 (5) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு வட பிரதேச (கீழ்) (வவுனியா) உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கனகநாயகம் நல்லைநாதன் ஆகிய நான் ஒரு தலைவரைத் தெரிவு செய்யும் பொருட்டு கீழேயுள்ள அட்டவணையில் முதலாம் பந்தியிற் காணப்படும் கிராமச் சபையின் கூட்டத்தை இரண்டாம் பந்தியிற் காணப்படும் திகதியில் மூன்றாம் பந்தியிற் காணப்படும் நேரத்தில் நான்காம் பந்தியிற் காணப்படும் இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

க. நல்லைநாதன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
வட பிரதேசம் (கீழ்).

உள்ளூராட்சி அமைச்சு,
வவுனியா அலுவலகம்,
7.10.1966.

| பந்தி 1 | பந்தி 2 | பந்தி 3 | பந்தி 4 |
| --- | --- | --- | --- |
| கிராமச் சபையின் பெயர் | திகதி | நேரம் | இடம் |
| பணங்காமம் .. | 27.10.66 .. | மு.ப. 10.00 .. | பணங்காமம் கிராமச் சபை மண்டபம் |

10–714—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டுவாடகைப்படி, தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்படற்பாலன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச்சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்தப்படுவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், இளைப்பாற்றிச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றிச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களில், அவற்றின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறுபோதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றிச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஐ) இளைப்பாறற் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஒ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உசிதமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஓ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையில் தேறவேண்டுமாறு வேண்டப்படுவர்.

(ஔ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(ஃ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றச் சம்பளமுள்ள பதவிகளில் இளைப்பாற்றச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்"களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும் பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்தம் செயற்படும். (13,387. இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ந் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதலில் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக, நிறுத்தப்படும், அதனையின் பின் போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில், விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சிச் சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

"(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)".

குறிப்பு.—இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கைப் பிரஜை என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் "இலங்கையர்" எனும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரஜையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை:

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு வரையறுக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைகளை தமக்கேற்றதாகக்கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, சமரமான படையில் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அதனுக் குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. வயதுச் சலுகை.—உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள், எவ்வயதினராயிருந்தாலும், விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அருகதையுடையோராவர்.

8. வேண்டற்பால ஏனையவை.—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுவோர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதியின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில் விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சக ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்படுதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிக்குமுன்னர் காணப்படின் விண்ணப்பதாருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) "3, இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிசேவை அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்படவேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது."

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரால் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பம் தபாலில் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

#### உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாக கவனிக்க.—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(iii) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்:—(1) பிறப்புச் சான்றிதழ், (2) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பக்காரர் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(........) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.

(ஆ) ........................ பதவிக்கான விண்ணப்பம்
முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.

2. தேசிய இனம் : ————
(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சாபு எண்ணையும் திகதியையும் கூறுக).

3. தபால் விலாசம் : ————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : ————.
..........வருடங்கள் ........மாதங்கள்......நாட்கள்
(ஆ) பிறந்த திகதி : ————.

5. பிறந்த இடம் :
(அ) விண்ணப்பக்காரர் : ————.
(ஆ) அவரது பிதா : ————.
(இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.
(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.

(விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளா, தாரமிழந்தவரா அல்லது கைம்பெண்ணா ? : ————

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ————

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்/தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. ........................ | .............. | .............. | 1. ........................ | .............. | .............. |
| 2. ........................ | .............. | .............. | 2. ........................ | .............. | .............. |
| 3. ........................ | .............. | .............. | 3. ........................ | .............. | .............. |
| 4. ........................ | .............. | .............. | 4. ........................ | .............. | .............. |
| 5. ........................ | .............. | .............. | 5. ........................ | .............. | .............. |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் ————.
(அ) சிங்களம் : ————.
(ஆ) ஆங்கிலம் : ————.
(இ) தமிழ் : ————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் : ————.

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக சம்பள அளவுத் திட்டமும் : ————.

(iii) இளைப்பாற்றிச சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழிபெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?

(அ) சிங்களம் : ————.

(ஆ) தமிழ் : ————

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விவரங்களையும் திகதிகளுடன் தருக) : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ——————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை : ——————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர், தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி, வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன என்பதையும் நான் அறிவேன்.

——————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ——————.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### நூனிலையப் பொறுப்பு உதவியாளர்கள் பதவிகள் (கொழும்பு மாநகர சபை) தரம் I, நூனிலையப் பொறுப்பாளர் பதவிகள் (கொழும்பு மாநகர சபையல்லாத ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில்)

மேற்படி பதவிகளுக்கு ஆண்/பெண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

**வேதன அடிப்படை.**—வருடாந்தம் ரூ. 960—24 × 72—ரூ. 2,688, வருடாந்தம் ரூ. 1,608 ம் வருடாந்தம் ரூ. 2,184 ம் பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

2. **வேண்டிய தகைமைகள்.**—(அ) 1966.11.8 ல் 25 வது வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை நூனிலையச் சங்கத்தின் 1 வது பரீட்சையில் பரீட்சார்த்திகள் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதற்குமுரியது. பெண் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டால், சகாய நிதி அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். பத்து வருட சேவைகள் முடியுமுன் அவர்கள், சகாய நிதிக்குத் தொடர்ந்து கட்டுப்பணதாரர்களாயிருக்க அல்லது 1952 ம் ஆண்டு உ.ஆ.சே. இளைப்பாற்றுச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின் பிரகாரம் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்திற்கு மாற்றப்பட அவர்களுக்கு விருப்புரிமையுண்டு. இந்த விருப்புரிமை மாற்றப்படமாட்டாது.

4. நியமனத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் உள்ளூராட்சி மன்ற எல்லைகளுக்குள் வசிக்க வேண்டியேற்படும்.

5. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியிலுள்ள தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும், உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும். 1966.11.8 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அல்லது அது சம்பந்தமான மற்றைய தொடர்புகளும் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைத் தலைவருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தரது முகமனுக்கும் அனுப்பக்கூடாது. குறிப்பிட்ட படிவத்திலுள்ள 13 வது பந்திக்குப் பதிலாகப் பின்வருபவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் :—

"13 (அ) நூனிலையப் பொறுப்பு வேலையில் உள்ள அனுபவம், ஏதுமிருந்தால், தகவல்கள் :—(சான்றிதழ்ப் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)".

8. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ.ஆ.சே.அ.ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு ஒக்றோபர் மீ

10-741—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### வடிகாலமைப்பு முகாரிகள் பதவிகள் இரண்டு

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில், கொழும்பு மா.ந.ச., மாநகர சபை எந்திரியின் திணைக்களத்துக்கு, நியமிக்கப்படுவார்கள்.

2. **வேதன அடிப்படை**—வருடாந்தம் ரூ. 2,820—9 × 120—4 × 180—ரூ. 4,620. வருடாந்தம் ரூ. 3,900 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **வேண்டிய தகைமைகள்.**—பின்வருவனவற்றுள் 10 வருட அனுபவத்துக்குக் குறைவில்லாத அனுபவமுடைய உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள ஓவசியர்கள், எந்திரிய ஓவசியர்கள், மற்றும் சமமான அல்லது உயர் தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) குழாயொட்டல், ஆழமான கழிவுப் பொருட் கிடங்குகள் கிண்டல், நீருக்கடியில் கொன்கிரீட் போடுதல், கீழ் நிலத்திலுள்ள நீர் பம்பிடுதல் போன்றவை.

(2) தொழிலாளரைக் கட்டுப்படுத்துதல்.

(3) வடிகாலமைப்பு வேலைகள் சம்பந்தமான மாதிரிப் படங்களை வாசித்துப் புரியுந்தன்மை.

4. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 1966 ம் ஆண்டு 8.11.66 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

6. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ.ஆ.சே.அ.ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 11 ந் வ.

10-750—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### உள்ளூர் ஆட்சி தட்டெழுத்தாளர்கள் சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை (ஆங்கிலம்)—1966

**பிரதேசங்கள் "அ", "ஆ" மாத்திரம்**

(அ) உள்ளூர் ஆட்சி தட்டெழுத்தாளர்கள் சேவையில் சேரவிரும்பும், ஆங்கிலத் தட்டெழுத்தில் தேர்ச்சியுடைய ஆண், பெண் பரீட்சார்த்திகளுக்கான போட்டிப் பரீட்சை ஒன்று அண்மையில் கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(ஆ) இவ்வறிவித்தலின் 8 வது பந்தியில் குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகளுக்காக, வெற்றிடங்களின் 50% சதவிகிதம் எழுத்துப் பரீட்சையில் குறிப்பிட்ட ஒரு தராதரத்தை அவர்கள் எயதும் பட்சத்தில், ஒதுக்கப்படும்.

**குறிப்பு.**— உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத் (264 வது அதிகாரம்) துக்கான இரண்டாவது அட்டவணையில் விதந்துரைக்கப்பட்ட பிரதேசங்கள் " அ ", " ஆ " வில் வசித்த பரீட்சார்த்திகள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும். (இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் " குறிப்பின் ", மூன்றுவது பந்தியைப் பார்க்கவும்).

2. **வேதனம்.**—உள்ளூராட்சிச் சேவையிலுள்ள தட்டெழுத்தாளர்கள் (ஆங்கிலம்) பதவிகளுக்கு, வெற்றிடங்கள் வரும்பொழுது, சித்தியடைந்த பரீட்சார்த்திகள், வருடாந்தம் ரூ. 960—72—ரூ. 2,688 வேதன அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இவ்வேதன அடிப்படையில் வருடாந்தம் ரூ. 1,608 உம், ரூ. 2,184 உம் பெறுமுன் வினைத்திறமைகாண் தடை செயற்படும். அரசாங்க வரிகள் நிபந்தனைகளுக்கிணங்க வீட்டு வாடகைப் படியும், அரசாங்க வரிகள், நிபந்தனைகளுக்கிணங்க தற்காலிக வாழ்க்கைப்படியும், விசேட வாழ்க்கைப்படியும் கொடுக்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்.**—(அ) பரீட்சையில் சித்தியடைந்த ஆண் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்களுக்குத் தகுதிகாண் காலநிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்களது பதவிகள் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதற்குரியவை. பரீட்சையில சித்தியடைந்த பெண் பரீட்சார்த்திகள் முதலில சகாநியதியடிப்படையில் நியமிக்கப்பட்டு, நியமனத்திகதியிலிருந்து 3 வருடங்களுக்குப் பரீட்சைகாண் காலநிலையிலிருப்பார்கள். 10 வருடங்கள் முடிவடைவதற்கு முன் எக்காலத்திலேனும், இளைப்பாற்றுச் சம்பள ஸ்தாபனத்துக்கும் வரும் விருப்புரிமையைப் பெற அவர்கள் தகுதியுடையவர்கள். இவ்விருப்புரிமையை ஒரு முறை பயன்படுத்தும் பெண் பரீட்சார்த்திகள், அதப்பின் தகுதிகாண் காலநிலையில அமர்த்தப்படுவார்கள். அதன் பின் அவர்களுடைய தகுதிகாண் காலநிலை, அவர்கள் சேவை செய்திராத 3 வருடப் பரீட்சைகாண் காலநிலைக்குச் சமமானதாகும்.

(ஆ) உள்ளூராட்சிச் சேவையில் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறத்தக்கதுமான பதவிகளை வகிக்கும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், உ. ஆ. சே. பிரமாணம் 22(2) ன் பிரகாரம் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். பதிற்கடமை காலப்பகுதி முடிவடைந்ததும் பதவியில் அவர்கள் உறுதிப்படுத்தப்படுவது கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். பதிற்கடமை காலப்பகுதி முதலில் 6 மாதங்களுக்குச செயற்படும்.

(இ) உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் (264 வது அதிகாரம்) அதன் கீழியற்றப்பட்ட எந்தப் பிரமாணங்கள் ஆகியவற்றிற்குட்படுத்தி, உள்ளூராட்சி மன்றத்தின் பிரமாணங்களினாலும், துணைச் சட்டங்களினாலும் சேவை நிபந்தனைகளும், விடுதலை அனுமதியும் ஆளப்படும்.

(ஈ) (மாநகரசபை தவிர்ந்த) உள்ளூராட்சி மன்றம் ஒன்றிற்கு நியமிக்கப்படும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், மேற்படி கட்டளைச்சட்டத்துக்கு விதந்துரைக்கப்பட்ட இரண்டாவது அட்டவணையிலுள்ள " அ ", " ஆ " பிரதேசத்துக்குள் இடமாற்றப்பட்டவராவதுடன் இலங்கையிலுள்ள "அ ", " ஆ " பிரதேசத்துக்குள் எந்த நிலையத்துக்கும் அனுப்பப்படுபவராவர்.

(2) தட்டெழுத்தாளர்கள் சேவை உள்ளூர் ஆட்சி எழுதுவினைஞர் சேவையின் ஒரு பகுதியாகாது. எனவே உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்புக்குப் பதவி உயர்வுக்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தட்டெழுத்தாளர்கள் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆயினும் தட்டெழுத்தாளர்கள் சேவையிலுள்ள தமது நியமனங்களில் அவர்கள் பதவி உறுதிப்படுத்தப்பட்டதும், வயது, கல்வித்தகைமைகள் எவ்வாறிருப்பினும் உள்ளூர் ஆட்சிச் சுருக்குத் தட்டெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்துக்குப் பிரவேசிப்பதற்கான பரீட்சைக்கு அமருவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

(உ) அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக கருமமொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை, அமுல் நடாத்துவது சம்பந்தமாக இதுவரை இயற்றப்பட்ட அல்லது இனிமேல் இயற்றப்படக்கூடிய விதிகள் எதனிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இணங்கவேண்டும். உ. ஆ. சே. கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் (264 வது அதிகாரம்) அதன் கீழியற்றப்பட்ட எந்தப் பிரமாணங்கள் அல்லது திருத்தங்களுக்கு உட்பட்டவராவர்.

4. இலங்கை அரசாங்க வர்த்தமானியின் 4 வது பகுதியில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். வெற்றிடங்கள் வந்தாலும், வரும்பொழுதும் அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

5. **தகுதி.**—

(1) பரீட்சார்த்திகள் நற்பண்புடையவராயிருத்தல் வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும். *

(3) பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றில் குறைந்தது ஏதாவதொன்றை உடமையாகக் கொண்டிருத்தல் வேண்டும்—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரச்சான்றிதழ் ; அல்லது

(ஆ) இலண்டன் மட்ரிக்குலேஷன் சான்றிதழ் ; அல்லது கேம்பிரிட்ஜ சிரேட்ட சான்றிதழ் ; அல்லது

(இ) பின்வருவனவற்றை உற்படுத்தியதும் இருதடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்கள் கொண்ட பொதுக்கல்விச் சான்றிதழ்—

(1) சிங்களம்/தமிழ்,

(2) எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தககணிதம்

(3) ஆங்கிலம் ; அல்லது

(ஈ) இலங்கை சிரேட்ட குடிமனைச் சான்றிதல் ; அல்லது

(உ) இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியின் இறுதி வர்த்தகச் சான்றிதழ் ; அல்லது

(ஊ) இலண்டன் வர்த்தக இலங்கைத் திட்டத்தின் கீழ், வர்த்தகக் கல்விச் சான்றிதழ் (பொது வர்த்தகம் அல்லது சுருக்குத் தட்டெழுத்தாளர்களின் பிரிவு (வெளிநாடுகள்) ; அல்லது

(எ) இலங்கைக் கல்வித் திணைக்களத்தாலும் இலங்கை வர்த்தக மன்றத்தாலும் அளிக்கப்பட்ட பொதுவர்த்தக கல்விச் சான்றிதழ் (பொது, வர்த்தக அல்லது சுருக்குத் தட்டெழுத்தாளர்களின் பிரிவு) அல்லது உயர்தர வர்த்தகக் கல்விச் சான்றிதழ (பொது, வர்த்தக அல்லது சுருக்குத் தட்டெழுத்தாளர்களின் பிரிவு) அல்லது உயர்தர வர்த்தகக் கல்விச்சான்றிதழ் (பொது, வர்த்தக அல்லது சுருக்குத் தட்டெழுத்தாளர்களின் பிரிவு) ; அல்லது

(ஏ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்குப் பதுவியலாளர்கள் அல்லது சுருக்குத் தட்டெழுத்தாளர்களுக்கான வர்த்தகச் சான்றிதழ் அல்லது உயர்தர வர்த்தகச் சான்றிதழ.

**குறிப்பு.**—இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களின் முடிவு திகதிக்கு முன, மேற்சொன்ன பரீட்சைகள் எதினதும் பெறுபேறுகள் விநியோகிக்கப் பட்டிராத, அப்பரீட்சைகளுக்குத் தோற்றியுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(4) 8.11.66 ல் பரீட்சார்த்திகள் 17 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுககு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும். தமது வயதிலிருந்து, சென்ற யுத்தத்தின்போது தாம் ஆற்றிய திரட்டுச் சேவையை, படைகளிலிருந்த பரீட்சார்த்திகள் கழிக்கலாம்.

(5) 20.10.66 க்கு நேர்முந்தி குறைந்தது 3 வருடங்களுக்காகுதல், உள்ளூர் ஆட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்துக்கான இரண்டாவது அட்டவணையில் விதிக்கப்பட்ட " அ ", " ஆ " பிரதேசத்தில் வசித்திருக்க வேண்டும்.

6. **தகுதி.**—(அ) உள்ளூர் ஆட்சிச் சேவையில் ஏற்கனவே ஊழியஞ் செய்விக்கப்படுபவர்களுக்கான விசேட சலுகைகள்—

(1) உள்ளூர் ஆட்சிச் சேவையின் கீழ 20.10.1966 ல் அல்லது அதற்கு முன் தொடர்ச்சியாக நானகு வருடங்கள் சேவை செய்தவர்கள், பின் வரும் தகைமைகளுடையவர்களாக இருக்கும் பட்சத்தில், பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(அ) கேம்பிரிட்ஜ் கனிஷ்ட சான்றிதழ் ;

(ஆ) கனிஷ்ட பாடசாலைச் சான்றிதழும், தட்டெழுத்தில் நிமிடத்துககு 30 சொற்கள் வேகமும் ;

(இ) மேற்கண்ட 5 வது பந்தியில் குறிப்பிடப்படும் உரிய கல்வித் தகைமைகள் இருக்கும் பட்சத்தில், வயது எவ்வாறிருப்பினும், பின்வரும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப் படுவர்—

(1) 20.10.1966 ல் அல்லது அதற்கு முன், உள்ளூராட்சி மன்றமொன்றின் நிரந்தர ஊழியத்திலிருக்கும், 2 வருடங்களுக்குக் குறையாத திருப்திகாமான சேவை செய்த பரீட்சார்த்திகள்.

(2) 20.10.1966 ல் அல்லது அதற்கு முன் உள்ளூராட்சி சேவையில், 1 வருடத்துக்குக் குறையாத திருப்திகர மான சேவை செய்த தற்காலிக பதவிகளை வகிக்கும் பரீட்சார்த்திகள்.

7. கொழும்பு மா. ந. சபையின் பிரயாணிகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் சேவையிலிருந்தவர்களும் ட்ரொலி பஸ் சாரதிகளும், கடத்திகளும், பதவி அழிக்கப்பட்டதனால் சேவையினின்று இளைப்பாற்று விக்கப்பட்டவர்களுமானவர்கள், 5(3) பந்தியில் குறிப்பிடப்படும் தகைமை கள் இருக்கும் பட்சத்திலும் 8.11.66 ல் 50 வயதுக்கு மேற்படாத இருக்கும் பட்சத்திலும் நிமிடத்துக்கு 40 சொற்கள் தட்டெழுத்தில் அடிக்கும் வேகம் இருக்கும் பட்சத்திலும் இப்பரீட்சைக்குத் தோற்ற அருகதையுடையவராவர்.

8. தகுதி—சிறிய ஊழியர்களுக்கான விசேட சலுகைகள்.

(1) உ. ஆ. சே. சிறிய ஊழியர்கள் ;

கீழ்க்கண்ட (அ) உம் (ஆ) உம் ஆகிய பகுதிகளுக்குள் வருபவர்களும், 1966 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ந் திகதி அன்று அல்லது அதற்குமுன் 5 வருடங்கள் திருப்திகரமான சேவையுடன் தம் நியமனங் களில் உறுதிப்படுத்தப்பட்டவர்களும் உள்ளூராட்சிச் சேவையில் நிரந்தர பதவிகள் வகிப்பவர்களுமானவர்கள், கல்வித்தகைமைகள் எவ்வாறிருப் பினும், இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். ஆனால் தட் டெழுத்தில் நிமிடத்துக்கு 30 சொற்கள் அடிக்கும் வேகம் தமக்குண்டு என்பதற்கான சான்றிதழைத் தகுதிவாய்ந்த அதிகாரத்திடமிருந்து பெற்று அனுப்பவேண்டும்.

(அ) வருடாந்தம் ரூபா 888 க்குக் கீழ் ஸ்திரமான வேதனங்கள் பெறுபவர்கள் அல்லது வருடாந்தம் ரூபா 888 ஆரம்ப வேதனமாகவும், உச்ச வேதனம் வருடாந்தம் ரூபா 1,842 க்கு அதிகமாகாததுமான வேதன அடிப்படையில் உள்ளவர்கள்.

(ஆ) வருடாந்தம் ரூபா 1,170 ஆரம்ப வேதனமாகவும், உச்சவேதனம் வருடாந்தம் ரூபா 1,842 க்கு அதிகமாகாததுமான வேதன அடிப்படை யில் உள்ளவர்கள் ; ஆனால் இவ்வேதன அடிப்படைகளில் உள்ள பதவி களுக்கு/தரங்களுக்கு “ நேரடியாக ” ஆட்சேர்க்கப்படாது. மேற்குறிப் பிட்ட (அ) ல் உள்ள பதவிகளில் இருந்து/தரங்களிலிருந்து “ பதவியுயர்த் தப்பட்ட ” வர்களாக அவர்களிருத்தல் வேண்டும்.

(2) உ. ஆ. சே. சிறிய ஊழியர்கள் அல்லாதவர்கள்.

உள்ளூராட்சி மன்றங்களில் நிரந்தர பதவிகள் வகிப்பவர்களும் 20.10.66 ல் அல்லது அதற்கு முன் 5 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைகளையுடையவர்களுமான சிறிய ஊழியர்கள் பந்தி கள் 5(3) லும் (4) லிலும் குறிப்பிடப்படும் வயதும் கல்வித்தகைமை களும் எவ்வாறிருப்பினும் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவராவர், ஆனால் தட்டெழுத்தில் நிமிடத்துக்கு 30 சொற்கள் அடிக்கும் வேகம் தமக்குண்டு என்பதற்கான சான்றிதழைத் தகுதிவாய்ந்த அதிகாரத்திட மிருந்து பெற்று அனுப்ப வேண்டும்.

9. **விண்ணப்பங்கள்.**—(1) 25.10.66 முதல் கொழும்பு, கோட்டை, கபூர் கட்டடம், முதன்மாடி, 29½ அறையிலுள்ள உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளரிடமிருந்து பரீட்சைப் பிரவேச விண்ணப் பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பரீட்சைக்கான பிரவேச விண்ணப்பப் படிவத்தைத் தபால் மூலம் கோரும் ஒவ்வொருவரும், தனது விண்ணபத்துடன், முகவரியிடப்பட்ட நீண்ட தபாலுறையையும் அனுப்பவேண்டும். பரீட்சையின் பெயர், பரீட்சையை எம்மொழிமூலம் பரீட்சார்த்தி எடுக்கவிருக்கிறார் என்ற விபரங்கள் தெளிவாக உறையின் தலைப்பிலுள்ள இடது கை மூலையில் எழுதப்பட்டிருக்கவேண்டும் ; இதனால் விரைவாகப் படிவங்களை உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளர் அனுப்பிவைப்பார்.

(2) 8.11.66 அன்று அல்லது அதற்கு முன் கொழும்பு, த. பெ. 530, உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட வேண்டும். இத் திகதிக்குப் பின் கிடைக்கும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். உறையின் தலைப்பிலுள்ள இடது கை மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) ரூபா 15/- பெறுமதியான முத்திரைகளில் கையொப்பமிட்டதைக் கொண்டதாக விண்ணப்பங்கள் இருத்தல் வேண்டும்.

(4) அரசாங்க சேவை அல்லது உள்ளூராட்சிச் சேவையில் ஏற்கனவே ஊழியஞ் செய்விக்கப்படும் பரீட்சார்த்திகள், தமது விண்ணப்பங்களை, தாம் வேலைசெய்யும் திணைக்களங்களின்/உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பவேண்டும். எந்த ஒரு பரீட்சார்த்தியும் இவ்விதம் செய்யத் தவறின் அவர் தகைமையிழந்தவராவர். 8.11.66 அன்று அல்லது அதற்கு முன் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டித் தமது விண்ணப்பங்களை நேரகாலத்துடன் தமது திணைக்களங்களின்/உள்ளூர் ஆட்சி மன்றங்களின் தலைவர்களிடம் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டப் படுகிறார்கள்.

10. **தகுதித் தாஸ்தாவேஜுகள்**—(1) 20.10.66 க்கு நேர்முந்திக் குறைந்தது 3 வருடங்களாக, உ. ஆ. சே. கட்டளைச்சட்டத் (264 வது அதிகாரம்) துக்கான இரண்டாவது அட்டவணையில் விதந்துரைப்பட்ட “ அ ”, “ ஆ ” பிரதேசத்தில் பரீட்சார்த்தி வசித்துவருபவர் என்று காட்டும் இருப்பிடச்சான்றிதழ், பெரும்பகுதி இறைவரி உத்தியோகத்தர், சமாதான நீதவான், வழக்குரைஞர், வழக்கறிஞர் அல்லது பிரசித்த நொத்தாரிஸ், இவர்களுள் யாரிடமாவது பெற்று இருத்தல் வேண்டும். (இச்சான்றிதழின் மாதிரிப்படிவம், விண்ணப்பப் படிவத்தில் 16 தது கூட்டில தரப்பட்டுள்ளது. மேற்சொன்ன எவரிடமாவது பரீட்சார்த்திகள் இதனைப் பூர்த்திசெய்து பெற்றுக்கொள்ள வேண்டும். வேறாகச் சான் றிதழை விண்ணபத்துடன் பரீட்சார்த்திகள் அனுப்பவேண்டியதில்லை.)

(2) இவ்வறிவித்தலின் 6(எ) (1) வது, 7 வது, 8 வது பந்திகளில் அளிக்கப்பட்ட விசேட சலுகைகளின் கீழ் விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி கள், தமது விண்ணப்பங்களுடன் தட்டெழுத்தில் (ஆங்கிலம்) நிமிடத் துக்கு 30 சொற்கள் அடிக்கும் வேகம் தமக்குண்டு என்பதற்கான சான்றிதழைத் தகுதிவாய்ந்த அதிகாரத்திடமிருந்து பெற்று அனுப்ப வேண்டும்.

(3) மேற்கண்ட (2) ல் குறிப்பிட்ட சான்றிதழ்களைத் தவிர வேறு எந்த தாஸ்தாவேஜும் விண்ணபத்துடன் அனுப்பப்படக் கூடாது. ஆனால் கேட்கப்பட்டவாறு, வேண்டப்பட்ட எல்லா தகவல்களும் படிவத்தில் தரப்படவேண்டும்.

(4) தகைமைபெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து தகுதிக்கான தாஸ்தா வேஜுகள் சாட்சியமாக வேண்டப்படும். இத்தகைய பரீட்சார்த்திகள் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவர் இவற்றைக் கேட்கும் பொழுது உடனேயே பதிவு அஞ்சல் மூலமாக இவற்றை அனுப்பிவைக்க வேண்டும்.

(5) பின்வரும் தாஸ்தாவேஜுகள் அவசியம் தேவை :—

(அ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (சத்தியவோலைகள், அல்லது கல்விக்காரணங்களுக்காக விநியோகிக்கப்பட்ட விசேட சான்றிதல்கள் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பிரித்தெடுக்கப் பட்ட சான்றுரைக்கப்பட்ட பிரதி போன்றவை ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.)

(ஆ) உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவரின் திருப்திக்கு ஏற்றவாறு பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்ட நற்பண்புச் சான்றிதழ், அரசாங்க அல்லது உதவிப்பாடசாலையில் பரீட்சார்த்தி பயின்றிருந்தால், அவர் கடைசியில் பயின்ற பயின்ற அரசாங்க அல்லது உதவிப் பாடசாலையின் அதிபதிட மிருந்து நற்பண்புச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லாவிட்டால், பரீட்சார்த்திகளின் உபாத்திமார் (பள்ளிக்கூட ஆசிரியர் விரும்பத்தக்கது) அல்லது சமாதான நீதவான், வழக் குரைஞர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தரிஸ் அல்லது பொது வாகக் கூறினால் பிரபலமானவரும், உடனடியாகத் தொடர்பு கொள்ளக் கூடியவருமான ஒருவர், இவர்களுள் ஒருவரிட மிருந்து நற்பண்புச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) கல்வித் தவகைமைகளுக்குச் சாட்சியமாயுள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதிகள்.

(ஈ) அடையாள அட்டை.

(6) விண்ணப்பங்களை அனுப்புந் தருணத்தில் வேண்டப்பட்ட தாஸ்தா வேஜுகளையும் தயாராய் வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப் படுகிறார்கள். வேண்டப்பட்ட தாஸ்தாவேஜுகளைக் காட்டமுடியாத அல்லது காட்டத் தாமதிக்கும் எந்தப் பரீட்சார்த்தியும் உ. ஆ. சே. அ. சபைத் தலைவரினால் கேட்கப்படும்பொழுது, பரீட்சார்த்தியின் பிரவேசம் நிராகரிக் கப்படும்.

**பி.கு.**—(1) விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்படாத விண் ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) இவ்வறிவித்தலினால் வேண்டப்பட்ட தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **பரீட்சைப் பிரவேசம்.**—ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பிய பரீட்சார்த்திகளுக்கு, உ. ஆ. சே. அ. ச. தலைவர், பிரவேசப் படிவங்களை விநியோகிப்பார். பரீட்சையை மேற்பார்வை செய்ய நியமிக்கப் பட்ட உத்தியோகத்தரிடம், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது பிரவேசப்படிவங்களைக் கொடுக்கவேண்டும். இத்தகைய படிவத் தைக் கொடுக்கத் தவறும் பரீட்சார்த்தி தகைமையிழப்பவராவர்.

(2) தமக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அமரவேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்ட மண்டபத்தைத் தவிர்ந்த வேறு மண்டபத்தில் தோற்றும் பரீட்சார்த்திக்குப் பரீட்சைப் பிரவேசம் மறுக்கப்படும்.

(3) பிரவேச அட்டையுடன், நேரசூசியும் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சைத் தினத் தன்று, மேற்பார்வை செய்யும் பரீட்சிப்பவரிடம் தனது பிரவேசப் படிவத்தைக் கையளிக்கவேண்டும்.

(4) பரீட்சை தினத்துக்குக் குறைந்தது 7 நாட்களுக்குள் தனது பிரவேசப்படிவம் கிடைத்திராத பரீட்சார்த்தி, தனக்குப் பிரவேசப்படிவம் கிடைக்கவில்லை என்றும், பின்வரும் தகவல்களைத் தந்தும், உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருடன் தொடர்புகொள்ள வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் :————.

(2) முழுப்பெயர் :————.

(3) முழுத்தபால் முகவரி :————.

பி. கு.—பரீட்சைக்கு பிரவேசம் அளிக்கப்பட்டால், தகைமை ஏற்றுக் கொள்ளப்பட்டதென்றாகாது.

12. இப்பரீட்சைக்கான பிரமாணங்களின் பிரகாரம் தகுதியற்றவர் என்று ஒரு பரீட்சார்த்தி காணப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது அதன்போது அல்லது அதன்பின் எந்த இடத்திலேயும், அவரது பரீட்சார்த்தம் இரத்து செய்யப்படத்தக்கது.

13. தம் அறிவின் எல்லைக்குள் பரீட்சார்த்திகளால் தரப்பட்ட எந்தத் தகவல்களும் பொய்யானவை என்று காணப்படும் பட்சத்திலுங்கூட அவர்கள் நியமனம் பெற்றிருந்தால், பதவிநீக்கம் செய்யப்படத்தக்கவ ராவார். வேண்டுமென்றே எந்த உண்மையையும் மறைத்தால், இவ் விதமே தண்டிக்கப்படத் தக்கவராவர்.

14. **அமராது விலகலும் பணம் மீளத் தராதலும்.**—எக்காரணத்தைக் கொண்டும் முத்திரைகளின் பெறுமதி மீளத்தரப்படமாட்டாது.

15. **உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விடுதலை.**—உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு தமது சபைகளில் கடமைபார்க்கும் உத்தியோகத்தர் களுக்குக் கடமை விடுதலை அளிக்கும்படி உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்கள் தயவுடன் வேண்டப்படுகிறார்கள்.

16. **அடையாள அட்டைகள்.**—தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும், மேற்பார்வையாளரின் திருப்திக்கிணங்க, பரீட்சை மண்டபத்தில் தாம் இன்னாரென்ற அடையாளத்தைப் பரீட்சார்த்திகள் நிரூபிக்க வேண்டும். இதற்கெனப் பின்வரும் தாஸ்தாவேஜுகளில் ஏதாவ தொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சற்பகுதி மா அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்கும் விநியோகிக்கப் பட்ட சட்டப் பெறுமதியான கடவுச்சீட்டு ;

(இ) அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்தின் பேரில், இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்கும் விநியோகிக்கப்பட்டதும், உரிமையாளரின் புகைப்படத்தைக் கொண்டதுமான உத்தரவுச் சீட்டு சான்றிதழ் அல்லது வேறு எந்த தாஸ்தாவேஜு களாவது ;

(ஈ) கடவுச் சீட்டின் (பாஸ்போட்) அளவுள்ள புகைப்படம், அதன் பின் பக்கத்தில் கீழ்க்காட்டப்படும் அத்தாட்சி, அவ்வாறு அத்தாட்சிப்படுத்தக்கூடியவர் ஒருவரால் கையொப்பப்படிவத் தில் இருத்தல் வேண்டும்.

பின் புறத்திலுள்ள புகைப்படம்————————என் வருடையதென்பதையும் அன்னாரின் கையொப்பம் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளதென்பதையும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளச் சீட்டைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் தகைமையிழந்தவராவர்.

17. **பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைப் பாடங்களும், ஒவ்வொரு பாடத் துக்குக் கொடுக்கப்பட்ட புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன. எல்லா எழுத்துத் தாள்களிலும், கூடாத கையெழுத்துக்கும், எழுத்துக் கூட்டல் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற கையெழுத் துடைய பரீட்சார்த்திகள் தகைமையிழப்பதற்குட்பட்டவராவர்.

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (1) ஆங்கில வியாசம் (ஒரு மணித்தியாலம்) | .. | 100 |
| (2) ஆங்கிலத்தில் தட்டெழுத்து 20 நிமிடங்களுக்கு, நிமிடத் துக்கு 30 சொற்கள் வீதம் தட்டெழுத்தில் தருதல் | .. | 150 |

**குறிப்பு.**—ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது சொந்த தட்டச்சு எந்திரத்தைப் பரீட்சை மண்டபத்துக்குக் கொண்டுவரவேண்டும். தட்டச்சுப் பொறிகளைப் பார்க்காது அடித்தல் அவசியம் என்று கருதப்படும் தட்டெழுத்துத் தாள்களுக்குப் புள்ளிகள் இடும்பொழுது, துப்பரவு, செம்மை, வேகம் ஆகியவை கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

18. **வைத்தியப் பரீட்சை**—தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தீவில் எந்தப் பகுதியிலும் சேவைசெய்ய உடற்றகுதியுடையவர்கள் என்று, வைத்தியப் பரீட்சையில் சித்தியடைய வேண்டியுள்ளது.

தலைவர்,
உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபை.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 10 ந வ.

**குறிப்பு.**—இப்பரீட்சை சம்பந்தமான எந்தத் தொடர்பும், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருடன் நேரடியாக வைத்துக்கொள்ளக் கூடாது.

*உள்ளூராட்சிச் சேவைகளுக்கு ஆட்சேர்ப்புக்கான காரணங்களுக்காக, " இலங்கையர் " என்ற பதம் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது :—

(அ) பரம்பரை வழியாக அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசை.

(ஆ) பதிவுமூலம் இலங்கைப் பிரசையாக இருப்பதற்கு, விண்ணப்பித்த அல்லது விண்ணப்பிக்கும் நோக்கமுடையவரும், இத்தகைய பிரசாவுரிமைக்குச் சாட்சியத்துடன் தகுதியுடையவர் என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரினாலும் கருதப்படுபவரு மாவர்.

குறிப்பிடப்படும் அட்டவணையில் விதந்துரைக்கப்பட்ட பிரதேசங்கள் வருமாறு :—

" ஏ " பிரதேசம் பின்வருபவற்றை உள்ளடக்கியுள்ளது :—

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை அரசிறை மாவட்டங்கள். புத்தளம் பற்று கிராமப்பகுதியும், கிறேவேட்ஸூம், கல்பிட்டி பகுதி, தமிழர் ஹத்பத்து, உடப்புகிராமப்பகுதி ஆகியவை தவிர்ந்த புத்தளம் அரசிறை மாவட்டம்.

" பி " பிரதேசம் பின்வருபவற்றை உள்ளடக்கியுள்ளது :—

வடமத்திய மாகாணமும், ஊவா மாகாணமும், கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம் அரசிறை மாவட்டத்திலுள்ள தமிழர் ஹத்பற்று, புத்தளம் பற்று, வவுனியா தெற்கு (சிங்கள பிரிவு) வவுனியா அரசிறை மாவட்டம். திருகோணமலை அரசிறை மாவட்டத்திலுள்ள கோமறன்கடவலை மதவாச்சி, கந்தளாய் கிராமப்பகுதி, மட்டக்களப்பு அரசிறை மாவட் டத்திலுள்ள பிந்தனைப்பற்று, அம்பாறை அரசிறை மாவட்டத்தி லுள்ள பானமகிராமப்பகுதி, வேவாகம்கற்று காரியாதிகாரியின் பிரிவின் கீழுள்ள மெடபலாத்து, உடபலாத்து கிராமப்பகுதிகள், [illegible] அரசிறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறைப்பற்று காரியாதிகாரியின் பிரிவின் கீழுள்ள சம்மாந்துறைப்பற்று காரியாதி காரியின் பிரிவின் கீழுள்ள சம்மாந்துறை மேற்கு கிராமப்பகுதி.

10–757—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

# துணைவிதிகள்

L.D.—B. 104/48
GJ. 19/3/2

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயம்) கிராமச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் நுவரெலியா மாவட்டத்திலுள்ள தியதிலகைக் கோறளைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரல் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செப்டம்பர் மீ 26 ந் உ.

### துணைவிதிகள்

1. பின்வரும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படும்—
(அ) பதம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்து வைத்தல்.
(ஆ) மொத்த விற்பனையின் பொருட்டுப் பதனழியக்கூடிய உணவுப் பொருட்களைச் சேகரித்துவைத்தல்
(இ) பசளை அல்லது செயற்கை உரம் உற்பத்தி செய்தல.
(ஈ) வினுகரி உற்பத்தி செய்தல்.
(உ) சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
(ஊ) தோல்பதனிடுஞ்சாலை வைத்தல்.
(எ) பாக்குப்பக்குவம் பண்ணல்.
(ஏ) இறைச்சி அல்லது கழிவிறைச்சி அவித்தல்.
(ஐ) தோல் சேகரித்து வைத்தல்.
(ஒ) எலும்பு சேகரித்து வைத்தல்.
(ஓ) மீனுக்குப் பனிக்கட்டி (ஐஸ்) இடல்.
(ஔ) பலகை பாடம் பண்ணல.
(க) ஷீட் இரப்பர் அல்லது கிரேப் இரப்பர் புகையூட்டல் அல்லது உற்பத்தி செய்தல்.
(கா) மூன்று மூடைகளுக்கு அதிகமான தொகையில் செயற்கை உரம் அல்லது செயற்கை உரம் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் பொருட்கள் சேகரித்து வைத்தல்.
(கி) கோடா உற்பத்தி செய்தல்.
(கீ) புகையிலை பதம் பண்ணல் அல்லது உலர்த்தல்.
(கு) கள் சேரிக்கும் நிலையம் ஒன்று வைத்தல்.
(கூ) சுருட்டுகள் உற்பத்தி செய்தல்.
(கெ) பீடிகள் உற்பத்தி செய்தல்.

2. பின்வரும் தொழில் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படும்.
(அ) கொப்பரா உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
(ஆ) கபூக் கிரவல் அல்லது கருங்கல் தோண்டுதல.
(இ) வைக்கோல் அல்லது பருத்தி நூல் சேகரித்து வைத்தல்.
(ஈ) தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல்.
(உ) காரீயம் பதப்படுத்தல் அல்லது சேரித்து வைத்தல்.
(ஊ) குழிதோண்டி சுண்ணக்கல் தோண்டுதல்.
(எ) இயந்திரத்தினுல் தேங்காயெண்ணை உற்பத்தி செய்தல்.
(ஏ) கறுவா எண்ணெய் உற்பத்தி செய்தல்.
(ஐ) தும்பு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்தல்.
(ஒ) ஆபரணம் உற்பத்தி செய்தல்.
(ஓ) கொல்லுலை ஒன்று வைத்தல்.
(ஔ) அச்சியந்திரசாலை ஒனறு வைத்தல்.
(க) அரிசி ஆலை ஒன்று வைத்தல்.
(கா) பிராணவாயு கொண்டு ஒட்டுதல்.
(கி) வாயுப்பானங்கள் உற்பத்தி செய்தல்.
(கீ) வெட்டுமரக்காலை ஒன்று வைத்தல்.

3. பின்வரும் தொழில்கள் அபாயகரமானவையாகவும் அருவருப்பானவையாகவும் கருதப்படும்.
(அ) சுண்ணும்பு சுடுதல், சேகரித்துவைத்தல், பதம்பண்ணல், அல்லது தகர்த்தல்.
(ஆ) பற்றறிகளுக்கு மின்னூட்டல்.
(இ) தும்புக்குச் சாயமூட்டல்.
(ஈ) செங்கற்கள் அல்லது ஓடுகள் சுடுதல்.
(உ) எண்ணெயினுல் அல்லது வேறு எரிபொருளினுல், நீராவியினுல் அல்லது மின்சாரத்தினுல் இயக்கப்படும் இயந்திரம் உபயோகிக்கப்படும் தொழில் எதுவும்.
(ஊ) தேயிலைத் தொழிற்சாலை வைத்தல்.
(எ) தளவாடங்கள் உற்பத்தி செய்தல்.
(ஏ) மட்கலங்கள் உற்பத்தி செய்தல்.
(ஐ) மோட்டார் வாகனங்கள் திருத்துதல்.

10-731—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

எல். டி.—பி. 4/66
ஜீ. ஜே. 19/2/4

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இரஸ்ஸகல்லைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு, தமக்கு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினுல் உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 26 ந் உ.

### துணை விதிகள்

#### உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்

1. சங்கத்துக்கு வருமதியான எல்லா வரிகளையும் அல்லது கட்டணங்களையும் அறவிடுதற்கும் தமது கையொப்பத்தின் படி உருவத்தையும் சபையின் முத்திரையையுங் கொண்ட அச்சடித்த பற்றுச் சீட்டுக்களைக் கொடுப்பதற்கும் எந்த உத்தியோகத்தருக்கும் அல்லது வேறு ஆள் எவருக்கும் தலைவர் எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

2. எவரேனும் வேண்டுமெனறு—

(அ) தலைவரையேனும் சங்கத்தின் வேறு உத்தியோகத்தர் எவரையுமேனும் கட்டளைச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட துணை விதிகளின் ஏற்பாடுகள் எதனுலேனும் அல்லது எதன் கீழேனும் அத்தலைவருக்கு அல்லது அவ்வுத்தியோகத்தருக்கு அளிக்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது சாட்டப்பட்ட அதிகாரம், கடமை அல்லது அலுவல் எதையும் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அல்லது செய்கையில், அல்லது,

(ஆ) சபையால் அல்லது சபைக்காக வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியர் அல்லது தொழிலாளி எவரையும், தலைவராலேனும் அல்லது சபையின் வேறு உத்தியோகத்தர் எவராலேனும் அவருக்குச் சட்டப்படி விதிக்கப்பட்ட கடமை எதையும் செய்கையில் தடைசெய்தலாகாது.

#### பொது அறிவித்தல்கள்

3. சபையின் கட்டளையின் பேரில் வெளியரங்கப்படுத்தப்பட்டிருக்கும் அறிவித்தல் எதனையும் எவரும் உருவழிக்கவோ அல்லது அழிக்கவோ கூடாது.

4. கட்டளைச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எத்துணை விதியின் ஏற்பாடுகளின் கீழ் சபை எவ்வேலையையும் நிறைவேற்றுகையில், தலைவரால் அல்லது தலைவரின அதிகாரத்தின் பேரில் வெளியிடப்பட்டிருக்கும் எவ்வறிவித்தலிலுமுள்ள உத்தரவுகளை எவரும் வேண்டுமென்று மீறவோ அல்லது எந்த அறிவித்தற் பலகையையும், வேலியையும், தூணையும் அல்லது தடையையும் அல்லது வேறெதனையும் அகற்றவோ கூடாது.

#### கட்டடங்களும் எல்லைச் சுவர்களும் கட்டுதல்

5. (அ) கிராமத்தின் வண்டித் தெரு எதனதும் மத்தியிலிருந்து இருபத்தைந்து அடி ;

(ஆ) காலக்கிரமத்தில் ஒரு கிராம வண்டித் தெருவாக மாற்றப்படவிருக்கும் பாதையெனச சபையால் அறிவிக்கப்பட்ட கிராமப் பாதை எதனதும் மத்தியிலிருந்து இருபத்தைந்து அடி ;

(இ) உபபந்தி (ஆ) வில் குறிப்பிட்ட பாதை தவிர்ந்த கிராமப் பாதை எதனதும் மத்தியிலிருந்து பதினைந்து அடி ;

தூரத்துக்குள், கிராமப் பிரதேசத்தில் எவரும் எவ்வித புதிய கட்டடத்தையும். எல்லைச் சுவரையும் அல்லது வாயில் முகப்பையும், எழுப்பவோ அல்லது கட்டவோ கூடாது.

6. தலைவருக்கு அதுபற்றிக் குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னர் எழுத்தில் அறிவித்தல் கொடுக்காது, (5) ம் துணை விதியில் குறிப்பிடப்பட்ட வண்டித் தெரு அல்லது பாதையில் ஓரமாக, கிராமப பிரதேசத்திற்குள் எவ்வித கட்டடத்தையும், எல்லைச் சுவரையும் வாயில் முகப்பையும் எவரும் கட்டவோ எழுப்பவோ கூடாது.

7. இத்துணை விதிகளில்—
"தலைவர்" என்பது சபையின் தலைவர் எனப் பொருள்படும் ;
"சபை" என்பது இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இரஸ்ஸகல்லைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபை எனப் பொருள்படும் ;
"கட்டளைச் சட்டம்" என்பது 1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

10-730—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

G.J. 19/3/17

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமாம்) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் நுவரெலியா மாவட்டத்திலுள்ள யட்டிப்பலாத்தைக் கோறளைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 26 ந் வ.

### துணைவிதிகள்

1. நுவரெலியா மாவட்டத்திலுள்ள யட்டிப்பலாத்தைக் கோறளைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தைகளும் முறைச் சந்தைகளும் பற்றிய நியமத் துணைவிதிகளின் 21 ம பாகத்தின் 1 ம் துணைவிதியின் நோக்கத்துக்கென நில்தந்தஹின்னைச் சந்தைக்குரிய சந்தைப் பிரதேசம் சந்தையிலிருந்து அரை மைல் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துள் அடங்கிய பிரதேசமாக இருக்கும்.

2. நில்தந்தஹின்னைச் சந்தையில் எந்த இடத்தையும் அல்லது விற்பனை நிலையத்தையும் உபயோகிப்பதற்கு அல்லது அதில் தங்கியிருப்பதற்கு பின்வரும் விகிதமான கட்டணம் ஒன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| (1) ஒவ்வொரு விற்பனை நிலையத்துக்கும் .. | 1 00 |
| (2) ஒரு சதுர யாருக்கு மேற்படாத ஒவ்வொரு இடப்பகுதிக்கும் .. .. | 10 |
| (3) ஒரு சதுர யாருக்கு மேற்பட்டதும் மூன்று சதுர யாருக்கு மேற்படாததுமான ஒவ்வொரு இடப்பகுதிக்கும் .. | 25 |
| (4) இடப்பரப்பு மூன்று சதுர யாருக்கு மேற்படவிருப்பின் ஒவ்வொரு சதுரயாருக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் .. .. .. | 10 |

10-727—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைசார்ந்த வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென, (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1966 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 12 ந் வ.

### அட்டவணை

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | **கொழும்பு மாவட்டம்** |
| | **கந்தானை பட்டினச் சபை** |
| 8 .. | எதிகே பீற்றர் சில்வா |
| | **எகொடபொத கிராமச்சபை** |
| 16 .. | விக்ரமாரச்சி மில்லவலகே நாகசிறி குமாரரத்ன |
| | **களுத்துறை மாவட்டம்** |
| | **பாணந்துறை–தல்பிடி பத்த கிராமச் சபை** |
| 18 .. | பெல்போலகே டொன் ஹென்றி குணதிலக |
| | **கண்டி மாவட்டம்** |
| | **உடுநுவர கங்கபலாத தெற்கு கிராமச் சபை** |
| 12 .. | ரத்ஞயக முதியான்செலா தயாரத்ன ரத்ஞயக |
| | **காலி மாவட்டம்** |
| | **இந்துருவ கிராமச் சபை** |
| 4 .. | ஹபக்கல கங்கானம்கே ஆரியசேன டி அல்விஸ் |
| | **பதுளை மாவட்டம்** |
| | **ரம்புக்பொத கிராமச் சபை** |
| 1 .. | ஹெற்றிவன்னகு ராஜபக்ஷ முதியான்செலாகே திஸாகாமி |
| | **கேகாலை மாவட்டம்** |
| | **வாகிரிகல கிராமச் சபை** |
| 21 .. | சிங்ஹல பேடிகே பியதாச |

10-748—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

---

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

குருநாக்கல் மாவட்டம்

பொதுஹர கிராமச் சபை

வீரசிங்ஹ அச்சில்லாகே கிரிபண்டா என்பவர் பொதுஹர கிராமச் சபையின் 14 ம் இலக்க வட்டாரப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரென (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகாரச் சபைகள் தேர்தற் கட்டளைச்சட்டத்தின் 36 ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல்கள் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1966 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 10 ந் வ.

10-749—20.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,718

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** *சாதாரணமாக* வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது, இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய* சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒகத்து ... | 19. 8.66 | வெள்ளி | .. | 12. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26. 8.66 | வெள்ளி | .. | 19. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர்... | 2. 9.66 | வெள்ளி | .. | 26. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி | .. | 2. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி | .. | 9. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி | .. | 16. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி | .. | 23. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் ... | 7.10.66 | வெள்ளி | .. | 30. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி | .. | 7.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் | .. | 14.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் | .. | 20.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| நவெம்பர் ... | 3.11.66 | வியாழன் | .. | 27.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் | .. | 3.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி | .. | 10.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி | .. | 18.11.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| திசெம்பர் ... | 2.12.66 | வெள்ளி | .. | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி | .. | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி | .. | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி | .. | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி | .. | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

*அரசாங்க அச்சகம், கொழும்பு,*
1966 ம் ஆப ஜூலை மீ 15 ந் வ.

பேர்னட் த சில்வா,
*அரசாங்க அழுத்தகன்.*

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.